**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.10.2025**
**OS. No. 09/2021**
**வழக்கு சாட்சி PW.1–வசந்தி , க/பெ. மகேந்திரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) என் கணவர் இறந்துவிட்டார் அவருக்கு சேரவேண்டிய சொத்தில் எனக்கும், என்னுடைய பிள்ளைகளுக்கும் பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என் மாமனார், மாமியார், மச்சான்டார்கள் மற்றும் அந்த சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 8 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக எந்தவித பதிவும் மேற்கொள்ள கூடாது என்பதற்காக அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம். இந்த வழக்கு எங்களுக்கும், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள பிரச்சனை காரணமாகத்தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகள் தவறு செய்துவிட்டதாக குறிப்பிட்டு எதுவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2) பொதுவாக ஒரு ஆவணம் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் இரு தரப்பினர்களும் நேரில் ஆஜராகி உரிய ஆவணம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் தான் அதை பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கிலும் உரிய ஆவணங்கள் மற்றும் உரிய கட்டணங்கள் செலுத்தியதால் ஆவணங்கள் பரிசீலனை செய்து பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதில் எங்களுக்கும் பங்கு உண்டு. நீதிமன்ற உத்தரவுப்படி செயல்பட 8 முதல் 10 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.